1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே பள்ளிகள், கல்லூரிகள் மற்றுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கு எல்லாம் வழங்க இடமிருக்கிறது. சட்டக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம்; மருத்துவக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம்; எல்லா இடங்களிலும் படிப்பு நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

வஞ்சிபாளையத்தில் ரயில்பெட்டி தொழிற்சாலை

*வினா எண் 473— திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம், அவினாசி தாலுகா, அவினாசிக்கு அருகாமையிலுள்ள வஞ்சிபாளையம் என்ற கிராமத்தில் ரயில் பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) மத்திய அரசிடம் வற்புறுத்தி இதை பெற நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள போக்குவரத்து நெரிசல்.

வினா எண் 474— திரு. எம். சின்னசாமி, திரு. இரா தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை-சென்ட்ரல் நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் மிகுந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS